**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், எம்.எ., பி.எல்.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 08ம் நாள் செவ்வாய்கிழமை

**IA.No.01/2024 in OS.No.78/2022**

**TNTM 03000185/2022**

சின்னப்பா உடையார் ... மனுதாரர்/வாதி

/எதிராக/

பழனி ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 23.06.2025 அன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கோபி,B.A.,L.L.B., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.S.சங்கர்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பிரசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரரின் அசல் வழக்கு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்டதை மீண்டும் விசாரணைக்கு எடுக்க உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் மனு தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதம் ஆன 127 நாட்களை மன்னித்து உத்தரவிடக் கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2**. மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர்/வாதி ஆவார். மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் கடன் தொகையை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார். போளூர் சார்பு நீதிமன்றம் புதியதாக உருவாக்கப்பட்ட பின்னர் போளூர் வட்டம், சேத்பட் வட்டம், கலசப்பாக்கம் வட்டம் ஆகிய எல்லையில் உள்ள வழக்குகளை

போளூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றி விட்டார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் எனது வழக்கும் போளூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றமாகிவிட்டது என்று மனுதாரர் நம்பினார். ஆனால் சிறிது காலத்திற்கு முன்பு தான் அவ்வாறு வழக்கு மாற்றம் அடையவில்லை என்றும், இதே நீதிமன்றத்தில் என்னை அழைத்தும் ஆஜர் ஆகாததால் 08.09.2023 ஆம் தேதி எனது வருகை இன்மையினால் எனது தவறுகையால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு மனு தாக்கல் செய்யாமல் விடுபட்டதால் ஏற்பட்ட 127 நாட்கள் காலதாமதம் ஆகிவிட்டதை மன்னித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3<u>. எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்:-</u>

மனுதாரர் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. மனுதாரர் மனு அபிடவிட் 3ம் பாரா சங்கதிகள் உண்மையல்ல. மனுதாரர் வேண்டுமென்றே பொய்யான காரணம் சொல்லி மனு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாவா சங்கதிகள் அனைத்தும் தெரிந்தும் வேண்டுமென்றே 08.09.2023 அன்று சமூகம் நீதிமன்றத்திற்கு வேண்டுமேன்றே வராமல் இருந்துவிட்டு தற்போது வழக்கறிஞரை சந்தித்து பிறகுதான் தாவா தள்ளுபடியான விவரம் தெரிய வந்தது என சொல்வது உண்மைக்கு புறம்பானவை. வேண்டுமென்றே இவ்வெதிர்மனுதாரரை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் காலம் கடந்து மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மனுவில் சொல்லியுள்ள காலதாமதம் சரியாக கணக்கிடப்படவில்லை. எனவே எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறியுள்ளார்.

4. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்தா? இல்லையா? என்பதே ஆகும்.

5. மனுதாரர், எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியம் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை.

6. **<u>பிரச்சனைக்கான தீர்வு:–</u>**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அசல் வழக்கை பிரதிவாதி மீது கடனுறுதிச்சீட்டின் அடிப்படையில் கடன் தொகையை திருப்பி கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார். போளூர் சார்பு நீதிமன்றம் புதியதாக உருவாக்கப்பட்ட பின்னர் போளூர் வட்டம், சேத்பட் வட்டம், கலசப்பாக்கம் வட்டம் ஆகிய எல்லை வரம்பில் உள்ள வழக்குகளை போளூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றி விட்டார்கள் என்ற நம்பிக்கையின் பேரில் எனது வழக்கும் போளூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றமாக்கிவிட்டது என்று நம்பினார். ஆனால் சிறிது காலத்திற்கு முன்பு தான் அவ்வாறு வழக்கு மாற்றம் அடையவில்லை என்றும், இதே நீதிமன்றத்தில் என்னை அழைத்தும் ஆஜர் ஆகாததால் 08.09.2023 ஆம் தேதி எனது வருகை இன்மையினால் எனது தவறுகையால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க 30 நாட்களுக்குள் மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். அவ்வாறு மனு தாக்கல் செய்யாமல் விடுபட்டதால் ஏற்பட்ட 127 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன். எனவே இம்மனுவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மனுத்தாக்கல் செய்து மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

7. எதிர்மனுதாரர் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரர் தனது மனுவின் மூன்றாவது பத்தியில் சொல்லி இருக்கும் காரணங்கள் உண்மையல்ல பொய்யான காரணங்களை சொல்லி இம்மனு தாக்கல் செய்திருக்கிறார். வேண்டுமென்றே மனுதாரர் 08.09.2023 ஆம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளார். இந்த எதிர்மனுதாரரை அலைக்கழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் காலம் கடந்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

8. புதியதாக போளூர் சார்பு நீதிமன்றம் ஆரம்பிக்கப்பட்டதால் போளூர் சார்பு நீதிமன்ற எல்லைக்குள் வரும் போளூர், சேத்பட், கலசப்பாக்கம் தாலுக்கா ஆகிய எல்லைகளுக்கு உட்பட்ட வழக்குகளை போளூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றி

விடுவார்கள் என்ற எண்ணத்தில் இந்நீதிமன்றத்தில் மனுதாரர் ஆஜராகவில்லை என்று காரணம் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கூறப்பட்டுள்ள காரணம் ஏற்கும் வகையில் இல்லை என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் இரு தரப்பினருக்கும் இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு இருதரப்பு விசாரணை அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள காரணம் ஏற்கும் வகையில் இல்லை என்றாலும் மனுதாரர் தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பினை அளிப்பது இயற்கை நீதியின் பால் அமையும் என்று நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. இருப்பினும் 127 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர் எதிர்மனுதாரருக்கு ரூ.1,000/-த்தை வருகின்ற 16.07.2025 தேதிக்குள் செலுத்த வேண்டும், செலுத்த தவறினால் இம்மனு தானாகவே தள்ளுபடி ஆகிவிடும். அழைக்க வாய்தா 16.07.2025.

**இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 08ஆம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.**

சார்பு நீதிபதி,
ஆரணி.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றிவணங்கள்:-** இல்லை

சார்பு நீதிபதி,
ஆரணி.

I.A.No.1/2024 in O.S.No.78/2022